செ.கு.எண் : 268.

நாள் : 22/12/2011.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை –22. 12.2011

21.12.2011 அன்று ஈரோட்டிலிருந்து பழனி நோக்கிச் சென்று கொண்டிருந்த அரசு பேருந்து, திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், சித்தராவுத்தான்பாளையம் கிராமம், பொள்ளாச்சி ரோடு அமராவதி சிலை அருகில் இருசக்கர வாகனம் மீது மோதியதில் வரப்பாளையத்தைச் சேர்ந்த திரு. தெய்வசிகாமணி என்பவரது மகன் ரவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த ரவி குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், ரவியை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9